*2020 செப்டம்பர் 16]*

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் கட்டடங்கள் உபயோகிக்கப்படாமல் பூட்டப்பட்டிருக்கின்றன என்று கூறியிருக்கின்றார்கள். அப்படியிருந்தால், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் பார்வைக்கு எடுத்துச் சென்று, அலுவலர்கள் மூலமாகவும், துறை ரீதியாகவும் அதனை ஆய்வு செய்து, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கும் அந்த மருந்தகம் அமைத்துத் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

### (ஆ) உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பட்ட உடுக்குறியிட்ட வினாக்கள் (பட்டியல்கள் 6 முதல் 15 வரை)@

### (இ) உடுக்குறியிடாத வினாக்கள் (பட்டியல் 16)@@

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.*

**[குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (* இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]*

*முற்பகல் 11–30*

## 2. விதி 110–ன்கீழ் அறிக்கைகள்

### (அ) பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களுக்கான தண்டனையை மேலும் கடுமையாக்கி மத்திய அரசின் அனுமதி பெற்று 1860 ஆம் ஆண்டைய இந்திய தண்டனைச் சட்டத்தில் சட்டத் திருத்தங்கள் கொண்டு வருதல் குறித்த சமூக நலத் துறை தொடர்பான முதலமைச்சரின் அறிக்கை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *பேரவை விதி 110–ன்கீழ் அறிக்கைகள் அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

---

@ *257 முதல் 1598 வரையிலான பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.*

@@ *1598 முதல் 1669 வரையிலான பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.*